# பதுளை மாநகர சபை
## பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூலை 01 ஆந் திகதிவரையும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2013 மே 27 ஆந் திகதி வரையில் 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருமான நிருவாகம்

#### 2.1.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராதிபதியினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 17,838 | 20,059 | 35,598 |
| (ii) | வாடகை | 22,812 | 25,850 | 14,939 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,710 | 6,594 | 115 |
| (iv) | ஏனைய வருமானம் | 21,678 | 15,997 | 5,680 |

### 2.1.2 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் கடைகளுக்கான மாதாந்த வாடகை பிரதம மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சி சேவையின் மதிப்பீட்டாளரின் மூலம் மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் சபைக்குரிய 503 கடைகளுக்காக சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 430,257 தொகையான வாடகை அறவிடப்பட்டிருந்தன.

(ii) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு முரணாக பதுளை வெலே கடை புதிய சந்தைத் தொகுதியின் தரைமாடியில் 04 கடைகளை வாடகைக்கு வழங்கப்பட்ட வாடகையாளரினால் அக் கடைகள் மக்கள் வங்கிக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(iii) வாடகையாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வாடகையினை விடக் குறைவான மாதாந்த வாடகை அறவிடப்படுவதன் காரணமாக உடன்படிக்கைத் திகதி தொடக்கம் 2012 திசெம்பர் 31 வரையான காலத்திற்காக ரூபா 3,432,000 தொகையான வருமானத்தை சபை இழந்திருந்தது.

(iv) மத்திய புதிய சந்தைத் தொகுதியின் இரண்டாவது மாடியின் கடைகளின் வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 39,000 தொகையான மாதாந்த வாடகை 5 வருடங்களுக்கு ஒரு தடவை 10 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 2010 யூன் தொடக்கம் 2011 திசெம்பர் வரையான காலத்தில் சபைக்கு ரூபா 70,200 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.1.3 பொது மலசலகூடத்தை வாடகைக்கு வழங்குதல்

சபைக்குரிய 03 மலசல கூடங்களை மீளாய்வாண்டிற்காக வாடகைக்கு வழங்கும் போது 2011 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்ட வாடகைத் தொகையை விடக்

பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் விளையாட்டு மற்றும் களியாட்ட செயற்பாடுகளுக்கான உத்தேச அபிவிருத்தி வலயத்தில் மேற்கூறப்பட்ட கழிவு முகாமைத்துவ செயற்திட்டம் அமைக்கப்பட்டிருந்தது.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 1992 பெப்ரவரி 26 ஆந் திகதிய 05/01/119 வெ ix ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அலுவலக நேரத்திற்குப் புறம்பாக இரண்டு மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட காலம் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய திட்டமிடல்குழு அங்கத்தவர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கையை உள்ளடக்கிய பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் 2010 ஆகஸ்ட் தொடக்கம் 2012 ஆகஸ்ட் வரை நடாத்தப்பட்ட 117 திட்டமிடல் கூட்டத்திற்காக 37 சந்தர்ப்பங்களின் போது ரூபா 555,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கட்டளையிடுவதற்கு முன்னர் வழங்குனரினால் பொருட்கள் வழங்கியமையின் காரணமாக 2013 சனவரி 30 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத் தொகுதியில் ரூபா 143,130 பெறுமதியான 1½ அங்குல 22.02 கல் கியூப்ளில் மிகை இருப்பு காணப்பட்டது.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

(அ) சபையினால் மாடு அறுவைக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக 03 கட்டங்களின் கீழ் 03 கிராம அபிவிருத்திச் சங்கங்களுடன் ரூபா 4,842,359 பெறுமதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் நிர்மாணம் தொடர்பாக 2013 சனவரி 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது விலங்குகளை அடைத்து வைக்கும் பட்டிகளுக்காகப் பொருத்தப்பட்ட ஜீஐ குழாய் 19.56 மீற்றர் தெரியும் வகையில் சுவரில் கட்டப்பட்டமையினால் ஜீஐ குழாய் 19.56 மீற்றருக்காகவும் செலுத்தப்பட்ட ரூபா 25,135 தொகை பொருத்தமற்ற செலவினமாகியிருந்தது.

(ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சபையினால் நிர்மாணிக்கப்படுகின்ற மாடு அறுவைக் கூட்டத்திற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.